8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(எ) தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப் பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-10

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

திரு. துரைமுருகன்: இந்த மசோதாவை எங்கள் கட்சியின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.